# DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | STC No. 678/2019 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.1<br>Defence |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அம்ஜத் இப்ராகிம் கான் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 10.11.2022.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. 2018 ல் நான் உடுமலைப்பகுதி உணவு பாதுகாப்பு அலுவலராக பணிபுரிந்தேன். எத்தனை வருடமாக இருந்தேன் என்றால் 02.07.2018 முதல் 26.07.21 வரை உணவு பாதுகாப்பு அலுவலராக இருந்தேன். நான் எதிரிகள் நிறுவனத்தில் கைப்பற்றிய டீத்தூளின் தரம் குறித்து ஆய்வறிக்கை பெற்ற தகவலை எதிரிகளுக்கு அவர்கள் மேல் நிவாரணம் தேடுவதற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதற்கு ஆதரவாக ஒப்புகை அட்டை சான்றை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் மாவட்ட உணவு பாதுகாப்பு நியமன அலுவலர் பதிவு தபால் மூலம் எதிரிகளுக்கு தகவல் தெரிவித்தார். அதற்கான ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

2. இந்த வழக்கின் புகார்தாரர் யார் என்றால் நான் தான். நான் தாக்கல் செய்துள்ள புகாரில் நான் தான் புகாரை தயார் செய்தேன். மேற்படி புகாரில் எதிரிகள் மீது வழக்கு தாக்கல் செய்ய அனுமதி கேட்டு மாநில உணவு பாதுகாப்பு ஆணையருக்கு அனுப்பிய அறிக்கையை தாக்கல்

செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன் அது எனது புகாரில் ஆவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அது என்னால் அனுப்பப்பட்டுள்ளது என்றால் நியமிக்கப்பட்ட அலுவலரால் அனுப்பப்பட்டுள்ளது. நான் வாங்கிய டீத்தூள் ஒரு கிலோ 200 கி அதில் 4.300 கிராம் அளவுள்ள பாக்கெட்டுகளாக பிரித்து பேக் செய்து ஒரு 300 கிராம் அளவுள்ள பாக்கெட்டை ஆய்வுக்கு அனுப்பினேன்.

3. நான் மேற்படி டீத்தூளை ஆய்வுக்கு அனுப்புவதற்கு பேக் செய்து அனுப்பியபோது உரிய சட்ட நடைமுறைகள் பின்பற்றப்பட்வில்லை என்றால் சரியல்ல முறையாக பின்பற்றப்பட்டுள்ளது. எனது புகாரில் நெகிழி பையில் டீத்தூளை நிரப்பி காக்கி காகிதத்தால் சுற்றப்பட்டு பேக் செய்யப்பட்டது என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஆனால் பேக்கிங் செய்யும்போது நெகிழி பையில் நிரப்பி காக்கி காகிதத்தால் முழுவதும் மடித்து லேபிள் ஒட்டி பேக் செய்யப்படவேண்டும் என்றால் சரிதான். என்னுடைய அறிக்கையில் நான்கு பேப்பர் சிலிப்பை ஒட்டி மேல் இருந்து கீழாக ஒவ்வொரு பார்சல் மீதும் பசை தடவி ஒற்றியதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி பசை எங்கிருந்து எடுக்கப்பட்டது என்றால் எங்களுடைய கிட்டிலேயே இருக்கும். அது என்ன வகையான பசை என்றால் நீர்மத்தன்மை உடையது ஆகும். அதைத்தான் காக்கிநிற காகிதத்தால் சுற்றி மடிக்கப்பட்டு பேக் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

4. என்னுடைய ஆய்வின் போது எடுக்கப்பட்ட 1200 கிராம் டீத்துளில் ஆய்வுக்கு அனுப்பிய 300 கிராம் அளவு கொண்ட ஒரு பேக்கை தவிர மீதம் மூன்று பாக்கெட்டுகளை எங்கு அனுப்பி வைத்தேன் என்றால் மாவட்ட உணவு பாதுகாப்பு நியமன அலுவலரிடம் ஒப்படைத்தேன். உணவு பாதுகாப்பு சட்டத்தின்படி உணவு பாதுகாப்பு நியமன அலுவலரிடம் ஒப்படைத்ததற்கு சான்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன் எனது புகாரில் 47 வது பக்கத்தில் அந்த ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன். மேற்படி எனது புகாரில் நான் எவ்வளவு அளவு கொண்ட எத்தனை பாக்கெட்டுகளை கொடுத்தேன் என்ற குறிப்பிட்ட விவரங்கள் காணப்படவில்லை என்றால் முத்திரையுடன் மூன்று உணவு பொட்டலங்கள் கொடுத்ததாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. என் புகாரில் உள்ள விவரங்களுக்கும் என் முதல் விசாரணையில் உள்ள விவரங்களுக்கும் வேறுபாடு உள்ளது என்றால் சரியல்ல. நான் புகாரில் குறிப்பிட்டுள்ளேன்.

5. நான் உணவு பாதுகாப்பு சட்டம் மற்றும் விதிகள் 2011 2.4.1(8)ன்படி உரிய வகையில் ஆய்வுக்கு எடுத்த டீத்தூளை பேக் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி விதிகளின் படி காக்கி காகிதத்தில் சுருட்டி பேக் செய்ய வேண்டும் என்று எங்கு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால்

உணவு பாதுகாப்பு சட்ட விதி 2.4.9(3)ல் உள்ளது. நான் சொன்ன விதியிலும் மேற்படி காக்கி காகிதத்தில் பேக் செய்ய வேண்டும் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். காகித்தின் நிறம் குறிப்பிடவில்லை ஆனால் தடிமனான பேப்பர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நான் ஆய்வுக்காக எடுத்து ஆய்வுக்கு அனுப்பிய பொருட்களின் Expiry date குறிப்பிடவில்லை என்றால் நான் ஆய்வுக்காக எடுத்த டீத்தூள் உதிரியாகத்தான் எதிரியிடம் இருந்து பயன்படுத்தப்பட்டதை கைப்பற்றப்பட்டதால் அதன் Expiry date தெரியாது. நான் ஆய்வுக்கு அனுப்பிய பிறகு ஒரு வருடம் கழித்து தான் நான் அனுப்பிய டீத்தூளை ஆய்வு செய்துள்ளார்கள் என்றால் சரிதான்.

6. ஆய்வறிக்கை கிடைக்கப்பெற்ற உடன் 14 நாட்களில் உரிய நடவடிக்கை எடுக்க பணிக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். நான் மேற்படி ஆய்வறிக்கையை எத்தனை நாட்களில் எதிரிகளுக்கு சார்வு செய்தேன் என்றால் 2 நாட்களில் அறிக்கை தயார் செய்து மாவட்ட நியமன அலுவலர் அலுவலகத்திற்கு அனுப்பிவிட்டேன். அந்த ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. நான் அவ்வாறு நடவடிக்கை எடுக்காததால் தான் அந்த ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. புதசாஆ.35 2ம் எதிரி சத்தியமோகன் எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். புதசாஆ.39 1ம் எதிரி எழுதிக்கொடுத்தார் என்றால் இல்லை 2ம் எதிரி எழுதிக்கொடுத்தார். மேற்படி ஆஜரில் உள்ள 1வது எதிரி தான் அவர் ஆவார்.

7. புதசாஆ.32 யார் எழுதினார்கள் என்றால் நான் எழுதினேன். புதசாஆ.38 மற்றும் 39 ஆவணத்தைநான் சொன்னதுபோல் 1 மற்றும் 2ம் எதிரி எழுதிக்கொடுக்கவில்லை என்றால்சரியல்ல அவர்கள் தான் எழுதியுள்ளார்கள் கையெழுத்து போட்டு கொடுத்தார்கள். எதிரிகள் எந்த ஊர் என்று தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன் கேரளா மாநில தளச்சேரி மாவட்டத்தை சேர்ந்தவர்கள் ஆவார்கள். எவ்வளவு நாட்களாக அந்த கடையை நடத்தி வருகிறார்கள் என்றால் சுமார் 3 ஆண்டுகள். மேற்படி இரண்டு எதிரிகளுக்கும் தமிழ் எழுத படிக்க தெரியாது என்றால் நான் அங்கிருந்த நபரிடம் தமிழில் எழுதியுள்ளதை அவர்களுக்கு படித்துக்காட்டி அவர்களும் அதை புரிந்துகொண்டு அதில் கையொப்பம் செய்தார்கள். யார் படித்து காட்டினார்களோ அவர்களிடம் சாட்சி கையெழுத்து பெறவேண்டும் என்று விதி உள்ளது என்றால் கட்டாயம் கிடையாது.அவ்வாறு படித்துக்காட்டிய 3ம் நபரிடம் கையெழுத்து பெறவில்லை எனில் அது நம்பத்தகுந்த ஆவணம் இல்லை என்றால் சரியல்ல.

8. மேலும் அந்த ஆவணத்தை யார் எழுதினார்கள் என்றும் படித்துக்காட்டிய நபர் யார் என்றும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

எவ்வளவு மணி நேரம் தாமதமாக சத்தியமோகன் வந்தார் என்றால் 2 மணி நேரம் வந்தார். அதற்கு முன்பே நான் பேக் செய்துவிட்டேன் என்றால் காசாளர் இருந்தார் அவரை வைத்து பேக் செய்துவிட்டேன் அதன் பிறகு தான் சத்தியமோகன் வந்தார். 2 எதிரிகளிடம் கைரேகை வாங்கவில்லை என்றால் சரிதான். விதிகளின் படி கைரேகை வாங்கவேண்டும் என்றால் அவசியம் இல்லை. இந்த பொருளை ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும் என்று கூறிதான் படிவம் 5(ஏ)வில் கையொப்பம் பெற்றேன் என்றால் சரிதான்.

9. ஆய்வுக்கு டீத்தூளை அனுப்பவேண்டாம் என்று கூறி 1ம் எதிரி ஆட்சேபணை தெரிவித்தாக எனது புகாரில் ஆவணம் தாக்கல் செய்திருந்தால் அது தவறுதான். உடுமலை வட்டார பகுதிகளில் ஆய்வுக்கு எடுக்கப்படும் பொருட்களை சென்னை ஆய்வகத்திற்கு அனுப்ப வேண்டும் என்று அரசிதழில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மதுரை ஆய்வகத்திற்கு அனுப்பி வைக்கவேண்டும் என்று உணவு பாதுகாப்பு துறை ஆணையாளரால் ஒரு உத்தரவு போடப்பட்டுள்ளது. மேற்படி உத்தரவை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மதுரை ஆய்வக அதிகாரியால் உணவு பாதுகாப்பு அலுவலகத்தில் போதிய அலுவலர்கள் இல்லை என புதசாஆ.53 ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் உரிய அலுவலர்கள் இல்லாததால் 14 நாட்களுக்கும் அறிக்கை அனுப்ப முடியாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

10. நாங்கள் அனுப்பி வைக்கும் மாதிரிகளை குறிப்பிட்ட நாட்களுக்கு ஆய்வு செய்ய வேண்டும் என்ற விதி உள்ளதா என்றால் உள்ளது. அதேபோல குறிப்பிட்ட நாட்களுக்கு மேல் தாமதம் ஆகும் என்றால் அதற்கான காரணத்தை குறிப்பிடவேண்டும் என்றால் சரிதான் இந்த வழக்கில் குறிப்பிட்டுள்ளார்கள். அவ்வாறு காரணம் குறிப்பிடப்படவேண்டும் என்றால் மாதிரி பொருளின் உண்மைத்தன்மையை அறிவதற்காக கால அவகாசம் வேண்டும் என்று தான் கேட்க முடியுமோ தவிர வேறு காரணங்களை கூறி கால அவகாசம் கேட்க முடியாது என்றால் அது உணவு பகுப்பாய்வு ஆய்வாளருக்குத்தான் தெரியும். ஒவ்வொரு பொருளுக்கும் ஆய்வு செய்வதற்கு ஒரு குறிப்பிட்ட காலம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றால் அது உணவு பகுப்பாய்வு ஆய்வாளருக்குத்தான் தெரியும்.

11. புதசாஆ.57 ல் கொடுத்துள்ள அறிக்கையில் என்ன கலர் டீத்தூளில் சேர்க்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் Dork Brown color CORSE Powder என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அது ஒரு நிறமி என்றால் சரிதான். நான் என்னுடைய பேக்கிங் முறை தவறாக செய்ததால் தான் Dork Brown color CORSE Powder நிறமி என்று அறிக்கை கொடுத்துள்ளார்கள்

என்றால் தவறு. எந்த தேதியில் ஆய்வுக்கு உட்படுத்தினார்கள் என்று ஆய்வறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் தவறு குறிப்பிட்டுள்ளார்கள். நான் மாதிரி அனுப்பியது 30.07.2018 ஆனால் அதை ஆய்வு செய்தது 03.06.2019 ஒரு வருடம் தாமதமாக ஆய்வு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

12. பேக்கிங் செய்யும்போது அதற்கு மேல் ஈரப்பதம் உள்ள பொருளை தடவக்கூடாது என குறிப்பிட்டுள்ள நிலையில் நான் ஈரப்பதம் வாய்ந்த பசையை அதில் தடவி உள்ளேன் என்றால் அது பசை தான் ஈரப்பதம் கிடையாது. பொதுவாக ஒரு பொருளை பேக் செய்யும்போது ஈரப்பதம் இல்லாத பொருளை வைத்துதான் பேக் செய்ய வேண்டும் என்றால் சரிதான். நான் ஏற்கனவே மேல் இருந்து கீழாக ஈரப்பதம் உள்ள பசையை தடவி ஒட்டி பேக் செய்ததாக குறிப்பிட்டுள்ளதால் உரிய நடைமுறை கடைபிடிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் டீத்தூளை எடுத்து பேக் செய்யும்போது உரிமையாளர் முன்னிலையில் தான் பேக் செய்திருக்க வேண்டும் என்றால் யார் அங்கு உள்ளார்களே அவர்கள் முன்னிலையில் பேக் செய்யலாம். உரிமையாளர் யார் என்று விசாரித்து தெரிந்து கொண்டிருக்க வேண்டும் என்றால் விசாரித்தேன் தெரியவில்லை என்று கூறிவிட்டார்கள்.

13. மேற்படி உரிமையாளர் குறித்து தெரிந்து கொள்ள சட்ட நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். 30.03.2017 ம் தேதி மாதிரி எடுத்தபோது நானே முழு பொறுப்பு என்று எங்கு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனது புகாரில் 39 வது பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் எதிரிகள் மேற்கண்டவாறு எவ்வித ஒப்புதலும் கொடுக்காமல் தமிழ் எழுத படிக்க தெரியாத நிலையில் நானே ஒரு நபரை கொண்டு எழுதி தயாரித்து அதில் மிரட்டி கையெழுத்து பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல. அதேபோல அந்த கடிதத்தை எழுதிய நபர் யார் என்று என்கு தெரியாது என்றால் சரிதான். எதிரிகளுக்கு தெரிந்த நபர் ஆவார். 1,2 எதிரிகளுக்கு ஆய்வின் முடிவை உரிய வகையில் பதிவு தபாலில் அனுப்பி வைக்கப்படாதால் அவர்களுக்கு சட்டப்பூர்வமாக மேல் முறையீடு செய்யும் வாய்ப்பு கிடைக்கப்படவில்லை என்றால் சரியல்ல அனுப்பப்பட்டுள்ளது.

14. மாதிரியை சேகரித்தபோது பொது சாட்சியான கண்ணன் பற்றிய விவரங்களை தெரிந்து கொண்டேனா என்றால் சுரேந்தின் என்பவர் தான் இருந்தார். ( **எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)**